மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 94/2020</u>

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>31.01.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்தானது 3ம் பிரதிவாதி பழனிச்சாமி என்பவர் பூமிக்கு தெற்கு என்று செக்குபந்தி கண்டு தான் வழக்கை போட்டு உள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தானது 3ம் பிரதிவாதியின் பூமிக்கு வடபுறம் உள்ளது என்றால் சரிதான். சர்வேயர் மூலம் அளந்து பார்த்ததில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூமிக்குள் எனது சொத்து இல்லை என்றால் சரிதான். எனவே நான் 1ம் பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் மூன்றாம் பிரதிவாதிக்கு எதிராக மட்டுமே கிடைக்கக்கூடியது என்றால் ஆமாம். க.ச.எண். 902ஏ புஞ்சை ஏக்கர் 6.11 என்று சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்தில் எனக்கு 16 சென்ட் பாத்தியம் என்று நான்

சொத்து விவரத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பின்பு நான் அளந்து பார்த்ததில் 13 1/2 சென்ட் நிலம் மட்டுமே உள்ளது என்பது உறுதியாகி உள்ளது என்றால் சரிதான். க.ச.எண். 902ஏ பு.ஏ 6.11 பூமியின் அனைத்து பாகஸ்தர்களையும் நான் இந்த வழக்கில் உறுப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் என் தாத்தாவிற்கு அதில் 2 ஏக்கர் 86 சென்ட் நிலம் மட்டுமே பாத்தியப்பட்டது. 2 ஏக்கர் 86 சென்ட் நிலத்தின் பாக்கியஸ்தர்கள் அனைவரையும் நான் இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். நான் சொல்வது போல் 2 ஏக்கர் 86 சென்ட் பூமியின் அனைத்து பாக்கியஸ்தர்களையும் நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடியாக தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.01.31 18:52:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்